මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/ADM/01/01/PERC
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.03.30

**ஊடக அறிக்கை**

## இலங்கையின் அறசிறை திரட்டு மற்றும் பொருளாதார மீட்புச் செயன்முறையை வலுப்படுத்த முறையானதொரு மதிப்பாய்வு மூலம் அரசாங்க செலவினங்களை பகுப்பாய்வு செய்தல்

2023.02.06 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அறசிறை திரட்டுச் செயன்முறை மற்றும் பொருளாதார மீட்புச் செயன்முறையை வலுப்படுத்துவதற்கு பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத்திட்ட அணுகுமுறையை (Zero-Based Budgeting Approach - ZBBB) பயன்படுத்தி 10 முக்கிய அமைச்சுக்களின் அரசு செலவினங்களை நியாயப்படுத்த, பொது மற்றும் தனியார் துறை வல்லுநர்களின் பங்கேற்புடன் 10 பொதுச் செலவின மதிப்பாய்வுக் குழுக்களை (Public Expenditure Review Committees - PERC) நிறுவ முடிவு செய்யப்பட்டது.

நீண்டகாலமாக இலங்கையில் பின்பற்றப்படும் வரவு செலவுத்திட்ட நடைமுறைகளில் பல குறைபாடுகள் உள்ளன. தேவையற்ற செயற்பாடுகள், ஒரேவிடயத்தை மீண்டும் செய்தல் மற்றும் பயனற்ற செயற்பாடுகள் என்பவற்றுக்கு பல ஆண்டுகளாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, முக்கிய நிரல் அமைச்சுக்களின் பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்குப் போதுமான நிதி கிடைக்கவில்லை. தற்பொழுது நிலவுகின்ற நிதி நெருக்கடியானது, பற்றாக்குறையான வளங்களை மிகவும் வினைத்திறனுடனும், உற்பத்தித் திறனுடனும் ஒதுக்கீடுசெய்வதை மிக முக்கியமான விடயமாக மாற்றியுள்ளது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், கடந்த கால வள ஒதுக்கீடுகளின் பகுப்பாய்வு மற்றும் செயல்திறன் தொடர்பான மீளாய்வு இல்லாமல், முந்தைய வருட வரவுசெலவுத் திட்டத்திற்கான அதிகரிப்புச் சரிசெய்தலின் அடிப்படையில் வருடாந்த வரவு செலவித்திட்டம் தயாரிக்கப்படுகிறது. பூச்சிய அடிப்படையிலான வரவுசெலவுத்திட்டத்திளை அறிமுகப்படுத்துவதற்கு இந்த பாரிய பொது நிதி சீர்திருத்தத்தின் மூலம், முந்தைய ஆண்டுகளின் வருட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டைப் பொருட்படுத்தாமல் வள ஒதுக்கீடுகளுக்கான நியாயங்களை நிரல் அமைச்சுக்கள் வழங்குவது அவசியமாகிறது. அதன்படி, அத்தகைய செலவினங்களின் தேவைகள், செலவுகள் மற்றும் தொடர்புடைய பலன்கள் ஆகியவற்றின் தெளிவான மதிப்பீட்டிற்குப் பிறகு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

பொதுச் செலவின, ஒவ்வொரு நிரல் அமைச்சினதும் நிகழ்ச்சித் திட்டங்கள் / கருத்திட்டங்கள் அனைத்தையும் மதிப்பாய்வு செய்வதுடன், அமைச்சின் கட்டளைக்கமைய முக்கிய செயற்பாடுகள் உள்ளதா என்பதைக் கண்டறியும். மேலும், மதிப்பாய்வுக் குழுவானது, விரயம்

மற்றும் தேவையற்ற செலவினங்களைக் கண்டறிந்து, அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் தேசியக் கொள்கைகளை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை அளிக்கும். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு அமைச்சினாலும் சேவை வழங்கலில் உற்பத்தித்திறன் மற்றும் செலவு செயற்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால சீர்திருத்தங்களை அவர்கள் அறிமுகப்படுத்துவார்கள்.

குழுக்களின் உறுப்பினர்கள் பின்வருமாறு;

**i. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

திரு. பிரியந்த ரத்நாயக்க, திறைசேரியின் பிரதிச் செயலாளர்
திரு. நிலுபுல் பெரேரா, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதம நிதி அதிகாரி
பேராசிரியர் அமல் எஸ்.குமாரகே, சிரேஷ்ட பேராசிரியர், மொரட்டுவ பல்கலைக்கழகம்
கலாநிதி டி.சிவகுமார், சிரேஷ்ட விரிவுரையாளர், மொரட்டுவ பல்கலைக்கழகம்
திரு. ஜிப்ரி ஸுல்பர், பிரதம நிறைவேற்று அலுவலர் - பிக்மி (டிஜிடல் மொபிலிடி சொலுஷன்ஸ் லங்கா (தனி) லிமிரற்

**ii. நகர அபிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

திரு. பிரியந்த ரத்நாயக்க, திறைசேரியின் பிரதிச் செயலாளர்
கலாநிதி எம்.எம்.எஸ்.எஸ்.பி. யாலேகம, மேலதிகச் செயலாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
பேராசிரியர் ஜகத் முனசிங்க, நகர மற்றும் கிராம திட்டமிடல் துறை, கட்டிடக்கலை பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்
திரு. அஜித் துடாவே, சிரேட்ட பணிப்பாளர், டுடாவே பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்
திரு. நடுன் பெர்னாண்டோ, பட்டய அளவு சர்வேயர் மற்றும் சட்டத்தரணி

**iii. பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

திரு. ஏ.கே. செனவிரத்ன, திறைசேரியின் பிரதிச் செயலாளர்
திரு. எம்.எல். கம்மம்பில, மேலதிகச் செயலாளர்- பொது நிர்வாகம்,
உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
பேராசிரியர் டி.ஏ. பிரேமகுமார டி சில்வா, சிரேஷ்ட பேராசிரியர், சமூகவியல் துறை, கலை பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
பேராசிரியர் தில்ருக்ஷி யாப்பா அபேவர்தன, தலைவர் -கணக்கியல் துறை, களனிப் பல்கலைக்கழகம்
கலாநிதி முதித் சுஜீவ, சிரேஷ்ட விரிவுரையாளர், கணக்கியல் துறை, வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம், களனி பல்கலைக்கழகம்

**iv. பாதுகாப்பு அமைச்சு**

திரு டபிள்யு. ஏ. சரத் குமார, திறைசேரியின் பிரதிச் செயலாளர்
திருமதி எஸ்.எல். தம்மிகா கே.விஜயசிங்க, மேலதிக செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
திரு அஜித் சந்திர, பெறுகை ஆலோசகர்
ரியர் அட்மிரல் (ஓய்வு) வை.எம். ஜயரத்ன, முன்னாள் கடற்படை தளபதி
அட்மிரல் (ஓய்வு) ரவீந்திர விஜேகுணரத்ன, முகாமைத்துவப் பணிப்பாளர், CEYPETCO

**v. பொதுமக்கள் பாதுகாப்பு**

திரு சரத் குமார, திறைசேரியின் பிரதிச் செயலாளர்
திருமதி எம்.எஸ்.பி. சூரியப்பெரும, மேலதிக செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
திரு சஜீவ மெதவத்த, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்
ஜகத் அபேசிறிகுணவர்தன, பாதுகாப்பு ஆலோசகர், Munchee குழுமம்
திரு. எல்.யு. ஹெட்டியாராச்சி, முன்னாள் நிதி அலுவலர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

**vi. கல்வி அமைச்சு**

திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தர, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், சட்ட அலுவல்கள் திணைக்களம்
திரு. எம்.என். ரணசிங்க, செயலாளர், கல்வி அமைச்சு
திரு. இலங்கசிங்க, மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு
பேராசிரியர் ரோஹன் சமரஜீவ, தலைவர், LIRNEasia
கலாநிதி ஹர்ஷ அலெஸ், கேட்வே குழுமத்தின் தலைவர்
சிரேஷ்ட பேராசிரியர் லக்ஷ்மன் திஸாநாயக்க

**vii. சுகாதார அமைச்சு**

திரு. ஆர்.எச்.டபிள்யு.ஏ. குமாரசிறி, பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
டாக்டர் பி.எல். அதபத்து, சுகாதார அமைச்சின் பணிப்பாளர்
பேராசிரியர் வஜிர திஸாநாயக்க, பீடாதிபதி, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
திரு. விஷ் கோவிந்தசுவாமி, தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம்
பேராசிரியர் மனுஜ் வீரசிங்க, பேராசிரியர் மற்றும் தலைவர், சமூக மருத்துவத் துறை, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

**viii. விவசாய அமைச்சு**

திருமதி அயந்தி டி சில்வா, பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம்
திருமதி கே.ஜீ.டி.என். ஜயசிங்க, பிரதம கணக்காளர், விவசாய அமைச்சு
திரு. ரஞ்சித் பேஜ், பிரதித் தலைவர் / குரூப் CEO, Cargills (Ceylon) PLC
பேராசிரியர் புத்தி மரம்பே, சிரேஷ்ட பேராசிரியர், பயிர் அறிவியல் துறை, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
திரு. பி.ஜி. சமிந்தா, உரிமையாளர், லும்பினி தேயிலை தொழிற்சாலைகள்

**ix. பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு**

திரு. கே.ஏ. விமலேந்திரராஜா, பணிப்பாளர் நாயகம், வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
திருமதி டபிள்யு. எம்.டி.ரி. விக்ரமசிங்ஹ, மேலதிகச் செயராளர் (கொள்கை மற்றும் தொழிற்பாடு), பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு
கலாநிதி அனுர ஏகநாயக்க, பொருளாதார நிபுணர்
கலாநிதி ரொஷான் ராஜதுரை, முகாமைத்துவப் பணிப்பாளர், ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ், ஹேலிஸ் பிஎல்சி
திரு. சுனில் பொஹோலியத்தே, முகாமைத்துவப் பணிப்பாளர், லங்கேம் தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்கள் (பிரைவேட்) லிமிடெட்

**x. நீர்ப்பாசன அமைச்சு**

திரு அஜித் அபேசேகர, பணிப்பாளர் நாயகம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
பொறி. திருமதி பி.எம். ஜயதீர, மேலதிகச் செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு
பொறி. இ.ஏ.சி.கே. எதிரிசூரிய, பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வு), நீர்ப்பாசன அமைச்சு
பேராசிரியர் லலித் ராஜபக்ஷ, பேராசிரியர், சிவில் பொறியியல் துறை, பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்
திரு விதானகமாச்சி, திறைசேரியின் முன்னாள் பிரதிச் செயலாளர்
பேராசிரியர் எஸ்.பி.வீரகோன், சிரேஷ்ட பேராசிரியர், சிவில் பொறியியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்